**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.445/2023

பெயர் : அகோரமூர்த்தி (PW2) (Cross )

த/க/பெ. :

தேதி :11.09.2025

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**9 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. என் முதல் விசாரணையில் உள்ள விபரங்கள் வாதி சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எத்தனை நபர்கள் மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்பது தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியாது. நான்கெல்லை தெரியும். விஸ்தீரணம் தெரியும். 20 செண்ட், 60 குழி. நாராயணசாமி இறந்து 40 வருடங்கள் இருக்கலாம். அவருக்கு மற்ற இடத்திலும் நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தை தவிர்த்து அவருடைய மற்ற சொத்துகளிலும் சென்று வேலை பார்ப்பேன் என்றால் சரிதான். அவருக்கு 4 பிள்ளைகள். 3 பேர் இறந்துவிட்டார்கள். ஒருவர் இருக்கிறார். மற்ற மகன்களுக்கும் நான் வேலை பார்த்துள்ளேன். வழக்கு சொத்தின் பத்திரங்களை நான் பார்த்ததில்லை. கோவிந்தசாமி இறந்து 15 வருடங்கள் இருக்கும். 8 ம் பிரதிவாதி ஞானசம்பந்தத்தை தெரியும். செம்பனார்கோவிலை சேர்ந்தவர். அவரிம் இந்த வழக்கு சொத்து இருந்தது என்றால் சரிதான். 15 வருடங்கள் அவரிடம் இருந்திருக்கும். 8 ம்பிரதிவாதியிடம் இருந்து தான் 9 ம் பிரதிவாதி வாங்கினார் என்றால் தெரியும். பதிவு பெற்ற ஆவணம் என்றால் சரிதோன். ஈஸ்வரி நகர் என்று பிளாட் அதில் போட்டுள்ளார்கள் என்றால் தெரியும். ஈஸ்வரி நகர் போட்டு 15 வருடம் இருக்கும் என்றால் தெரியாது. அதில் நிறைய நபர்கள் பிளாட் வாங்கி வீடு கட்டியுள்ளார்கள் என்றால் நான் அங்கு சென்று 20 வருடங்கள் ஆகிறது. வழக்கு விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும் வாதி அழைத்ததன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**10 மற்றும் 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

10, 11 பிரதிவாதிகள் எதிராக வாதி வழக்கில் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. வழக்கு யார் யாருக்கு எதிராக போட்டுள்ளார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியும். திருச்சம்பள்ளி என் சொந்த ஊர். தாவா சொத்தும் அங்கு தான் உள்ளது. தாவா சொத்தை பொறுத்து வாதி பாக

பிரிவினை பட்டுமே கேட்டுள்ளார் என்பதால் சார்பதிவாளருக்கு எதிராக வழக்கில் எந்த பரிகாரமும் இல்லை எனவே என்னுடைய சாட்சியம் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.